Notice is hereby given to the public in general and in particular to the Borrower/s and Guarantor/s that the below described immovable properties mortgaged/ charged to Truhome Finance Limited (formerly M/s Shriram Housing Finance Limited), the Symbolic Possession of which have been taken by the Authorized Officer of Truhome Finance Limited, will be sold on "As is where is", "As is what is" and "Whatever there is" basis in e-auction on 25.05.2026 between 11:00 a.m. to 1:00 p.m. for recovery of the balance due to Truhome Finance Limited from the Borrowers And Guarantors, as mentioned in the table.

Details of Borrowers and Guarantors, amount due, Short Description of the immovable property, reserve price and earnest money deposit and date of Inspection are also given as:

| Name of Borrowers/ Co-Borrowers/ Guarantors/Mortgagers | Amount of Recovery and date of Demand Notice | Reserve Price (Rs.) & Bid Increment | Date & Time of Auction | Contact Person Details – (AO and Disposal team) |
|---|---|---|---|---|
| **1.Mr. Anwar (Co-borrower/Co-Applicant) S/o Shahul Hameed No.390, Ganapathi Nagar, Arambakkam Thiruvallur – 601 201**<br>**2. Mr. Abdul Gafar (Borrower/Applicant) S/o Anwar No.390, Ganapathi Nagar, Arambakkam Thiruvallur – 601 201**<br>**3.Mrs. Sulaika Bee (Co-borrower/Co-Applicant) W/o Anwar No.390, Ganapathi Nagar, Arambakkam Thiruvallur – 601 201**<br>Date of Possession & Type: **23rd October, 2026 and Symbolic Possession**<br>Encumbranches known: **Not Known** | Demand Notice Date: 08.08.2025<br>Rs.26, 28, 238 (Rupees Twenty Six Lakhs Twenty Eight Thousand Two Hundred and Thirty Eight Only) as on dated 07/08/2025 under reference of Loan Account No. SHLHTVAR0000272 with further interest at the contractual rate, within 60 days from the date of receipt of the said notice. | Rs. 24,81,300/- (Rupees Twenty-Four Lakhs and Eighty One Thousand and Three Hundred Only)<br>**Bid Increment:** Rs. 20,000/- and in such multiples.<br>**Earnest Money Deposit (EMD)(Rs.)**<br>Rs. 2,48,130/- (Rupees Two Lakhs Forty Eight Thousand One Hundred and Thirty Only)<br>**Last date for submission of EMD : 23rd May, 2026 Time 10.00 a.m. to 05.00 p.m.** | **25-May-2026**<br>**Time: 11.00 A.M. to 01.00 p.m.** | **S Singh 8428648685**<br>**James Clement - 7200282906**<br>**Property Inspection Date & Time 23.05.2026 11.00 A.M. to 01.00 p.m.** |

**Description of Property**

All that piece and parcel of Land and Building, Comprised in Gramanatham S.No. 350/1, Block No. 22, Measuring with to an extent of 545 Sq.Ft., Situated at Arambakkam Village, Gumidipoondi Taluk, Thiruvallur District, and bounded on the North by : Land & House belongs to Mrs Sathiya B South by: Land belongs to Mr. Samsutheen East by : Road West by : Canal Situated at within the Sub Registration District of Gummidipoondi and in the Registration District of Thiruvallur.

| Name of Borrowers/ Co-Borrowers/ Guarantors/Mortgagers | Amount of Recovery and date of Demand Notice | Reserve Price (Rs.) & Bid Increment | Date & Time of Auction | Contact Person Details – (AO and Disposal team) |
|---|---|---|---|---|
| **1. Mr. Prashanth A (Borrower/Applicant) S/o Anumanth Rao No. 462/C, 11th Street, Pananthope, Railway Colony Ayanavaram, Chennai – 600 023**<br>**2. Mr. K P Anumanth Rao (Co-borrower/Co-Applicant) S/o Penchalaiah No. 462/C, 11th Street, Pananthope, Railway Colony Ayanavaram, Chennai – 600 023**<br>Date of Possession & Type: **21st November, 2025 and Symbolic Possession**<br>Encumbranches known: **Not Known** | Demand Notice Date: 11.09.2025<br>Rs. 21, 37, 086 (Rupees Twenty One Lakhs Thirty Seven Thousand and Eighty Six Only) as on dated 10/09/2025 under reference of Loan Account No. SHLHCHNI0003824 with further interest at the contractual rate, within 60 days from the date of receipt of of the said notice. | Rs. 27,62,500/- (Rupees Twenty Seven Lakhs and Sixty Two Thousand and Five Hundred Only)<br>**Bid Increment:** Rs. 20,000/- and in such multiples.<br>**Earnest Money Deposit (EMD)(Rs.)**<br>Rs. 2,76,250/- (Rupees Two Lakhs Seventy Six thousand two hundred and Fifty Only)<br>**Last date for submission of EMD : 23rd May, 2026 Time 10.00 a.m. to 05.00 p.m.** | **25-May-2026**<br>**Time: 11.00 A.M. to 01.00 p.m.** | **S Singh 8428648685**<br>**James Clement - 7200282906**<br>**Property Inspection Date & Time 23.05.2026 11.00 A.M. to 01.00 p.m.** |

**Description of Property**

All that Piece and Parcel of Residential Flat, bearing Plot No. 2A, (As per Sub Division of Plot No.2), Comprised in Old S.No. 392/4, T.S. No. 51/6, Block No. 27, Ward No. E, measuring with to an extent of 187 Sq.Ft., UDS out of 2087 Sq.Ft., together with bearing Flat No F3, in the First Floor, having a Super built up area of 500 Sq.Ft., (including Common Rights & areas), Along with Car parking, in the building known as "Grace Enclave" Situated at Regularization Approved No. RL/WDCN07/02483/2020 & Sub Division plan No. SD/WDCN07/00016/2021, Kuttiseril Lake View Garden (Extension), Korattur Village, Ambattur Taluk, Chennai District and bounded on the North by : Plot No.1 , South by: Plot No.2B, East by: Layout Road
West by : Vacant Land
Measurements: East to west on the Northern side – 65 Feet 9 Inches , East to West on the Southern side – 77 Feet ½ Inches
North to South on the Eastern side – 29 Feet 6 Inches , North to South on the Western side – 31 Feet 7 ½ Inches
Situated within the Sub- Registration District of Villivakkam and in the Registration District of Central Chennai.

| Name of Borrowers/ Co-Borrowers/ Guarantors/Mortgagers | Amount of Recovery and date of Demand Notice | Reserve Price (Rs.) & Bid Increment | Date & Time of Auction | Contact Person Details – (AO and Disposal team) |
|---|---|---|---|---|
| **1.Mr. Ramesh (Borrower/Applicant) S/o Guravaiah No.5, Telugu Colony, Arani, Thiruvallur – 601 101**<br>**2.Mrs. R Lavanya (Co-borrower/Co-Applicant) W/o. Ramesh No.5, Telugu Colony, Arani, Thiruvallur – 601 101**<br>Date of Possession & Type: **23rd October, 2025 and Symbolic Possession**<br>Encumbranches known: **Not Known** | Demand Notice Date: 12.06.2025<br>Rs. 11, 37, 409 (Rupees Eleven Lakhs Thirty Seven Thousand Four Hundred and Nine Only) as on dated 09/06/2025 under reference of Loan Account No. SHLHCHNI0004102 with further interest at the contractual rate, within 60 days from the date of receipt of the said notice. | Rs. 24,86,700/- (Rupees Twenty-Four Lakhs and Eighty Six Thousand and Seven Hundred Only)<br>**Bid Increment:** Rs. 20,000/- and in such multiples.<br>**Earnest Money Deposit (EMD)(Rs.)**<br>Rs. 2,48,670/- (Rupees Two Lakhs Forty Eight Thousand Six Hundred and Seventy Only)<br>**Last date for submission of EMD : 23rd May, 2026 Time 10.00 a.m. to 05.00 p.m.** | **25-May-2026**<br>**Time: 11.00 A.M. to 01.00 p.m.** | **S Singh 8428648685**<br>**James Clement - 7200282906**<br>**Property Inspection Date & Time 23.05.2026 11.00 A.M. to 01.00 p.m.** |

**Description of Property**

Plot No. 24: All that piece and parcel of Land and Proposed Building, Bearing Plot No. 24, Comprised in S.No. 288/3, Measuring with to an extent of 1130 Sq.Ft., Situated at Arani Village, Ponneri Taluk, Thiruvallur District and bounded on the North by : Plot No.23, South by : Street , East by : Street, West by : Plot No.25
Measuring East to West on the Northern side : 7 Meter , East to West on the Southern side : 8 Meter , North to South on the Eastern side : 14 Meter ,
North to South on the Western side : 14 Meter
Plot No. 25: All that piece and parcel of Land and Proposed Building, Bearing Plot No. 25, Comprised in S.No. 288/3, Measuring with to an extent of 1130 Sq.Ft., Situated at Arani Village, Ponneri Taluk, Thiruvallur District and bounded on the North by : Plot No.22, South by : Street , East by : Plot No.24, West by: Plot in S.Nos. 288/5A & 288/5B1
Measuring East to West on the Northern side : 7 Meter , East to West on the Southern side : 8 Meter
North to South on the Eastern side : 14 Meter North to South on the Western side : 14 Meter
Situated within the Sub- Registration District of Arani and in the Registration District of Thiruvallur.

1) **For detailed terms and conditions of the sale, please refer the website of Truhome Finance Limited (Formerly Shriram Housing Finance Limited) website.**
2) **The intending bidders have to submit their EMD amount to be deposited by way of RTGS/NEFT to the account details mentioned herein below: BANK NAME: AXIS BANK LIMITED BRANCH: BANDRA KURLA COMPLEX, MUMBAI BANK ACCOUNT NO. Current Account No. 911020045677633 IFSC CODE: UTIB0000230.**

Place : Thiruvallur
Date : 08.05.2026

Sd/- Authorised Officer- Truhome Finance Limited
(Formerly Shriram Housing Finance Limited)

### உச்சநீதிமன்ற தீர்ப்பு புதிய ஆட்சிக்கு பொருந்தாது

# விஜய் முதல்வர் ஆவதை தடுக்கவில்லை: பெரும்பான்மையை நிரூபித்தால் ஆட்சி அமைக்க உரிமை கோரலாம்

### கவர்னர் அர்லேகர் பேட்டி

சென்னை, மே 8–

**விஜய் முதல் வர் ஆவதை தடுக்கவில்லை. அ.தி. .மு.க., திமுக தங்களுக்குள் இணைந்து பெரும்பான்மையை நிரூபித்தால்கூட, அவர்களும் ஆட்சி அமைக்க உரிமை கோரலாம் என்று தமிழக ஆளுநர் ஆர்.வி.அர்லேகர் தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பாக தனியார் ஆங்கிலத் தொலைக்காட்சிக்கு கவர்னர் அளித்துள்ள பேட்டியில் கூறியிருப்பதாவது:–

தவெக தலை வர் விஜய் தனக்கு பெரும்பான்மை இருப்பதாக தெரிவித்தால் எந்தெந்த கட்சிகளின் ஆதரவு தனக்கு இருக்கிறது என்பதை முன்கூட்டியே நிரூபிக்க வேண்டும். அப் படி பெரும்பான்மையை நிரூபிக்க முடியாத கட்சியை எப் படி நான் ஆட்சி அமைக்க அழைக்க முடியும். விஜய் நாளைக்கே தனக்கு 118 உறுப்பினர்களின் ஆதரவு இருப் பதாக நிரூபித்தால் உடனே அவரை ஆட்சி அமைக்க அழைக்கப் போகிறேன்.

இந்த சூழலில் விஜய்யை நான் தடுப்பதாக எப்படி கூற முடியும். விஜய் மட்டுமல்ல, ஜனநாயக முறைப்படி யாரையுமே என்னால் தடுக்க முடியாது. அ.தி .மு.க, தி.மு.க. தங் களுக்குள் இணைந்து பெரும்பான்மையை நிரூபித்தாலும் அவர் கள்கூட ஆட்சி அமைக்க உரிமை கோரலாம்.

என்னைப் பொருத் தவரை, 118 உறுப்பினர் களின் ஆதரவு இருப்பதை யார் நிரூபிக்கிறார்களோ அவர்களைத் தான் என்னால் அழைக்க முடியும். அதற்காக அனை வரையும் ஆளுநர் மாளிகைக்கு அழைத்து வர வேண்டும் என்ற அர்த்தமில்லை.

எஸ்.ஆர்.பொம்மை வழக்கின் உச்சநீதி மன்ற தீர்ப்பு தற்போதைய தமிழக அரசி யல் சூழலுக்கு பொருந் தாது. அந்த வழக்கு ஏற்கெனவே உள்ள ஆட்சிக்குத்தான் பொருந்தும். புதிய ஆட்சி அமைவதற்கு அனுமதி வழங்குவதற்கு அந்த வழக்கின் தீர்ப்பை அடிப் படையாக கொள்ள முடியாது.

அடுத்த 2, 3 நாட் களில் யாருமே ‘118’ என்ற இலக்கை அடைய முடியாவிட்டால், எனக்கு முன்பாக சட்டரீதியாக என்னென்ன வழிமுறைகள் இருக்கிறதோ அதில் சிறப்பான ஒன்றை கடைபிடிப்பேன்.

எம்எல்ஏக்களை நட்சத்திர விடுதிகளில் அடைத்து வைத்து குதிரை பேரம் நடத்துவது நல்ல விஷயம் அல்ல. அதை தடுப் ப தற்காகத் தான் என்னால் முடிந்த வரை இந்த விவகாரத்தை விரைவாக முடிவுக்கு கொண்டு வர முயற்சித்து வருகிறேன். அதற்காக பெரும்பான்மை இல்லாத ஒரு கட்சியை அழைத்து ஆட்சி அமைக்குமாறு என்னால் எப் படி கூற முடியும்?

சட்டசபையில் தங்கள் பலத்தை நிரூபிக்க முடியாவிட்டால் அது அந்த கட்சியின் பிரச்சினை மட்டுமல்ல. ஒட்டுமொத்த தமிழக மக் களின் பிரச்சினையும்கூட. எதையும் ஆராய்ந்து பார்க்காமல் ஒரு கட்சியை அழைத்து எப் படி பதவிப் பிரமாணம் செய்து வைத்து ஆட்சி அமைக்குமாறு கூற முடியும்?

118 உறுப்பினர்களின் ஆதரவு யாருக்கு இருக்கிறது என்பதை ஆராய்ந்து, அதில் திருப்தி யடைந்தால் மட்டுமே என்னால் அடுத்த கட் டத்துக்கு செல்ல முடியும். இந்த விவகாரத்தில் அதிகப் படியான அழுத்தங்கள் எனக்கு இருக்கிறது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### “செல்போன், சமூக வலைதளங்களை தவிர்த்து படிப்பில் முழு கவனம் செலுத்தினேன்”

# +2 தேர்வு: சென்னையில் ஆட்டோ டிரைவரின் மகள் சந்தியா 595 மதிப்பெண் பெற்று சாதனை

சென்னை, மே 8–

சென்னையின் அசோக் நகர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் படித்த ஆட்டோ ஓட்டுநரின் மகள் வி.சந்தியா, பிளஸ்2 பொதுத்தேர்வில் 600க்கு 595 மதிப்பெண்கள் பெற்று பள்ளியில் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

சந்தியாவின் தந்தை ஆர்.சரவணன் ஆட்டோ ஓட்டி குடும்பத்தை நடத்தி வருகிறார். மாதம் ரூ.15 ஆயிரம் முதல் ரூ.20 ஆயிரம் வரை வருமானம் பெறும் நிலையில், பொருளாதார சிரமங்களையும் மீறி தனது மகளை படிக்க வைத்துள்ளார்.

+2 தேர்வு முடிவு இன்று காலை வெளியானதும் சந்தியா பள்ளி முதலிடம் பெற்றுள்ளதாக தலைமை ஆசிரியர்கள் அறிவித்ததும் சந்தியா ஆனந்த கண்ணீர் வடித்தார். கணக்குப்பதிவு, வணிகவியல் மற்றும் பொருளாதாரம் ஆகிய மூன்று பாடங்களில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்றுள்ளார்.

இதுகுறித்து சந்தியா கூறுகையில், செல்போன் மற்றும் சமூக வலைதளங்களை முழுமையாக தவிர்த்து படிப்பில் மட்டும் கவனம் செலுத்தினேன். எனது வெற்றிக்கு பெற்றோர்களும் ஆசிரியர்களும் முக்கிய காரணம். குறிப்பாக தமிழ் ஆசிரியர் என்னை தனது மகளைப் போல பார்த்துக் கொண்டார். தற்போது சார்ட்டர்டு அக்கவுண்டண்ட் படிப்பை தொடர விரும்புகிறேன். குடும்பத்தின் பொருளாதார நிலையை உயர்த்த வேண்டும் என்பதே என் கனவு” என்றார்.



அவரது தந்தை சரவணன் கூறுகையில், “10ம் வகுப்பில் 500க்கு 464 மதிப்பெண்கள் எடுத்த பிறகு சந்தியா காமர்ஸ் பிரிவை தேர்வு செய்தாள். அவள் எதை செய்தாலும் சிறப்பாக செய்வாள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது” என்றார்.

தலைமையாசிரியர் கே.வாசுகி கூறுகையில், “இந்த ஆண்டு எங்கள் பள்ளியின் தேர்ச்சி விகிதம் 99.4 சதவீதம். பொருளாதார ரீதியாக பின்தங்கிய மாணவர்களுக்கு அரசு பள்ளிகள் தொடர்ந்து ஆதரவாக இருந்து வருகின்றன” என்றார்.

### வாட்ஸ் ஆப்பில் கடிதம் அனுப்பினால் போதுமா?

# அறுதிப்பெரும்பான்மை கிடைக்காத சூழலில் அரசியல் கட்சித் தலைவர்களை விஜய் நேரில் சந்தித்து ஆதரவு கேட்க வேண்டாமா?

### விசிக சிந்தனை செல்வன் குற்றச்சாட்டு

சென்னை, மே 8–

**அ று தி ப் பெ ரு ம் பா ன் மை கிடைக்காத சூழலில் அரசியல் கட்சித்தலைவர்களை நேரில் சந்தித்து ஆதரவு கேட்க வேண்டாமா வாட்ஸ் ஆப்பில் கடிதம் அனுப்பினால் போதுமா என்றும் தமிழகத்தில் கொல்லைப்புறவழியாக கவர்னர் ஆட்சியை திணிக்க பாஜக முயற்சி செய்கிறது என்று விசிக துணைப் பொதுச்செயலாளர் சிந்தனை செல்வன் கூறியுள்ளார்.**

இதுகுறித்து அவர் கூறியுள்ளதாவது:

தேர்தலுக்கு பிந்தைய அசாதாரண சூழலை கையாளுவதில் தவெக விஜய் தடுமாறிப்போய் இருக்கிறாரா அல்லது அவருடன் இருக்கும் இரண்டாம் கட்டத்தலைவர்கள் அவரை தவறாக வழி நடத்துகிறார்களா என கேள்வி எழுகிறது. ஆட்சி அமைப்பதற்கான அறுதிப்பெரும்பான்மை தனக்கு கிடைக்காத சூழலில் மிக கவனமாக தவெக செயல்பட்டிருக்க வேண்டும். உடனே தான் ஆதரவு கோர விரும்பும் அரசியல் கட்சித்தலைவர்களை விஜய் நேரில் சந்தித்திருக்க வேண்டாமா ? இரண்டாம் கட்டத்தலைவர்களின் பிடியில் தான் இல்லை என்பதையும், கவர்னர் வழியாக பாஜக தமிழகத்திற்குள் நுழைய முயற்சிப்பதை தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் மனம் விட்டு கலந்துரையாடி இருக்க வேண்டாமா? வாட்ஸ் ஆப்பில் ஆதரவு கேட்டு கடிதத்தை அனுப்பிவிட்டு பதில் சொல்லுங்கள் என்பதை எப்படி புரிந்து கொள்வது?. வெற்றிபெற்ற பின் தேர்தலுக்கு முந்தைய முரண்பாடுகளை கூர்தீட்டாமல், அனைத்து தலைவர்களின் நன்மதிப்பை பெரும் வகையில் பெருந்தன்மையாக கருத்துக்களை விஜய் கையாண்டிருக்க வேண்டும்.

ஆனால் வெற்றிச்செய்தி வந்த மறுக்கணமே மன்னராட்சிக்கு முடிவு கட்டடப்பட்ட நாள் என ஆணவத்தையும், பழி வாங்கும் மனநிலையையும் வெளிப்படுத்தியது சரிதானா? மோதிலால் நேரு, ஜவகர்லால் நேரு, இந்திராகாந்தி, ராஜீவ்காந்தி, ராகுல்காந்தி என அய்ந்தாவது தலைமுறை வாரிசு அரசியலை சுமக்கும் காங்கிரசுடன் கை கோர்த்துக் கொண்டு வாரிசு அரசியலைப் பேசுவதை விட நகைமுரண் வேறேதும் இருக்கமுடியுமா ?. திமுகவை ஒழித்துக்கட்டப்பட்ட மன்னராட்சி என பேசிவிட்டு திமுக தலைமையில் கூட்டணி அமைத்து வெற்றிகண்டுள்ள இடதுசாரிகளையும் விசிகவையும் கூசாமல் ஆதரவு கேட்டு அழைப்பதில் என்னவகை தர்க்க நியாயம் உள்ளது.

விஜய் அவர்கட்குள்ள கரிஷ்மா அடையாளத்தை , நாயக பிம்பத்தை பயன்படுத்திக்கொண்டு அவரை வெளியே வரவிடாமல் இளவரசாக்கி முடக்கி வைத்து விட்டு அவருடன் இருக்கும் இரண்டாம் கட்ட தலைவர்களில் ஒரு சிலர் திமுகவின் மீதுள்ள பகையை தீர்த்துக்கொள்ள விஜய்யை பயன்படுத்துகிறார்கள். ஆட்சிக்கு வந்த மறு நிமிடமே திமுக அதிமுக தலைவர்கள் கைது செய்யப்படுவார்கள் என பிதற்றுவது ஆணவத்தின் உச்சமல்லவா. விசிக கட்சியில் தலைவர் திருமாவுடன் இருபது பேர் மட்டும் தான் இருக்கிறார்கள். மற்றவர்கள் எல்லாம் எங்கள் ஆட்கள் தான். சிலீப்பர் செல்லாக அங்கே இருக்கிறாரகள் என பேசுவது என்னவகை அரசியல் அறம்?

அரசியல் புரிதலாலும் தனது அன்பாலும் தனது சட்டமன்ற உறுப்பினர்களை தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள வேண்டிய விஜய் தமிழ்நாட்டில் மீண்டும் சட்டமன்ற உறுப்பினர்களை அடைத்துவைக்கும் ரிசார்ட் அரசியலை கொண்டு வந்திருப்பது தகுந்ததல்ல. விஜய் தன்னுடன் இருப்பவர்களின் தவறான அணுகுமுறையும் தவறான வழிகாட்டலும் தான் தனக்கு ஆதரவு வந்து சேர்வதற்கான வழியை அடைத்து வைத்திருக்கிறது என்பதை உடனே உணரவேண்டும். ஜனநாயக நெறிமுறைகள் அனைத்தையும் மீறி கவர்னர் ஆட்சியை திணிக்க பாஜக தமிழக பாஜக முயன்று வரும் இந்த சூழலின் ஆபத்தை உணருவதும் அதை தடுத்து தமிழ்நாட்டை காப்பதுதான் மக்கள் முன்னால் உள்ள சவால்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 12ம் வகுப்பு தேர்வில் 100% தேர்ச்சி: நுங்கம்பாக்கம் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சிஐடி நகர் மேல்நிலைப் பள்ளி சாதனை

சென்னை, மே. 8–

**சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் 12–ம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் 92.96 சதவீத மாணவ, மாணவியர் தேர்ச்சி பெற்றுள்ளனர். சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் 35 மேல்நிலைப் பள்ளிகள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.**

2025–2026–ம் கல்வியாண்டில் நடைபெற்ற 12–ம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் 2,257 மாணவர்கள் மற்றும் 2,922 மாணவியர் என மொத்தம் 5,179 மாணவ, மாணவியர் தேர்வு எழுதினர். இதில் 2,028 மாணவர்கள் (89.85%) மற்றும் 2,750 (94.11%) மாணவியர் என மொத்தம் 4,778 மாணவ, மாணவியர் தேர்ச்சி பெற்றுள்ளனர். தேர்ச்சி சதவீதம் 92.26% ஆகும். (கடந்த ஆண்டின் தேர்ச்சி விகிதம் 88.12% ஆகும்.)

பாடவாரியான தேர்ச்சி சதவிகிதத்தில் கணினி பயன்பாடுகள் பாடப்பிரிவில் 8, கணினி அறிவியல் பாடப்பிரிவில் 10, கணக்குப் பதிவியல் பாடப்பிரிவில் 8, பொருளாதாரம் பாடப்பிரிவில் 2, வணிகக் கணிதம் பாடப்பிரிவில் 2, அடிப்படை இயந்திரப் பொறியியல் பாடப்பிரிவில் 2, உணவு சேவை மேலாண்மைப் பாடப்பிரிவில் 90, நெசவு மற்றும் ஆடை வடிவமைப்பு பாடப்பிரிவில் 4, தணிக்கையியல் பாடப்பிரிவில் 47 என மொத்தம் 173 மாணவ, மாணவியர் 100க்கு 100 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர்.

மொத்த மதிப்பெண்கள் அடிப்படையில் 43 மாணவ, மாணவியர் 551க்கு மேல் 600 வரை மதிப்பெண்களும், 241 மாணவ, மாணவியர் 501லிருந்து 550 வரை மதிப்பெண்களும், 543 மாணவ, மாணவியர் 451லிருந்து 500 வரை மதிப்பெண்களும் பெற்றுள்ளனர்.

மதிப்பெண்கள் அடிப்படையில் முதல் ஐந்து இடங்களில் உள்ள பள்ளிகள்: புல்லாஅவென்யூ சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி 600 மதிப்பெண்களுக்கு 593 மதிப்பெண்கள் பெற்று முதலிடத்தையும், பெரம்பூர், எம்.எச்.சாலை சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி 600 மதிப்பெண்களுக்கு 586 மதிப்பெண்கள் பெற்று இரண்டாமிடத்தையும், பெரம்பூர், மார்க்கெட் தெரு சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி 600 மதிப்பெண்களுக்கு 583 மதிப்பெண்கள் பெற்று மூன்றாமிடத்தையும், புல்லா அவென்யூ சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி 600 மதிப்பெண்களுக்கு 579 மதிப்பெண்கள் பெற்று நான்காமிடத்தையும், புல்லா அவென்யூ சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி 600 மதிப்பெண்களுக்கு 578 மதிப்பெண்கள் பெற்று ஐந்தாமிடத்தையும் பெற்றுள்ளன.

100% தேர்ச்சி பெற்ற மேல்நிலைப் பள்ளிகளின் விவரம் : நுங்கம்பாக்கம் சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் சி.ஐ.டி. நகர் சென்னை மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் 100 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

# மக்களின் தீர்ப்பை மதிக்க வேண்டும்: கனிமொழி எம்.பி. வலியுறுத்தல்

சென்னை, மே 8–

‘‘தமிழகத்தில் யாருக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை, எனினும் மக்களின் தீர்ப்பை மதிக்க வேண்டும்’’ என்று தி.மு.க. எம்.பி. கனிமொழி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், ‘‘ஜனநாயகத்தில் மக்களின் தீர்ப்பு என்பது முக்கியமான விஷயம், அதனை நாம் மதிக்க வேண்டும். துரதிர்ஷ்டவசமாக தேர்தல் முடிவுகள் குழப்பமாக வந்துள்ளன. யாருக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. எனினும் மக்களின் தீர்ப்பை மதிக்க வேண்டியது நம் கடமையாகும். அண்ணா தி.மு.க.வுக்கு தி.மு.க. ஆதரவு என்பது யூகம்தான். யூகங்களுக்கு எல்லாம் பதில் சொல்ல முடியாது. நிறைய வதந்திகள் பரவுகின்றன. இப்போது இருக்கும் சூழ்நிலையில் பல குழப்பங்கள் இருக்கின்றன. தமிழகத்திற்கு கவர்னரே தேவையில்லை என்ற நிலைப்பாட்டில்தான் நாங்கள் எப்போதும் உறுதியாக இருக்கிறோம்’’ என்றார்.

# எடப்பாடி தலைமையில் விரைவில் ஆட்சி அமையும்: தம்பிதுரை பேட்டி

சென்னை, மே 8–

**எடப்பாடி தலைமையில் விரைவில் ஆட்சி அமையும் என்று தம்பிதுரை கூறினார்.**

தமிழக சட்டமன்ற தேர்தல் களத்தை முதன்முறையாக சந்தித்த விஜய் தலைமையிலான த.வெ.க. 108 இடங்களை கைப்பற்றி தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்து வரலாற்றில் இடம்பிடித்து உள்ளது.இந்த வெற்றி உற்சாகத்தில் விஜய், கவர்னர் அர்லேகரை சந் தித்து த.வெ.க.வை ஆட்சி அமைக்க அழைக்குமாறு உரிமை கோரினார்..ஆனால் கவர்னர் அர்லேகர், ஆட்சி அமைக்க 118 இடங்கள் தேவை என்பதால், 118 எம்.எல். ஏ.க்கள் பெயர் பட்டியலை வழங்கினால்தான் ஆட்சி அமைக்க அனுமதிக்க முடியும் என்று திட்டவட்டமாக தெரிவித்து விட்டார்.

இதையடுத்து,தி.மு.க.கூட்டணியில் காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு, விடுதலை சிறுத்தைகள் ஆகிய கட்சிகளிடம் ஆதரவு கேட்டு விஜய் கடிதம் எழுதினார். இதனிடையே, 5 எம்.எல்.ஏ.க்கள் வைத்துள்ள காங்கிரஸ் தவெகவுக்கு ஆதரவு அளித்துள்ளது. தலா 2 எம்.எல்.ஏ.க்கள் வைத்துள்ள விசிக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் (சிபிஎம்), இந்திய கம்யூனிஸ்ட்(சிபிஐ) மற்றும் முஸ்லிம் லீக் கட்சிகள் (ஐயுஎம்எல்) ஆதரவை பெற தவெக பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

இதனைத் தொடர்ந்து, திமுக எம்.எல்.ஏ.க்கள் கூட்டத்தில் எந்த முடிவையும் எடுக்க மு.க. ஸ்டாலினுக்கு அதிகாரம் அளித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தவெக தனிப்பெரும் கட்சியாக இருந்தாலும் பெரும்பான்மை இல்லாததால் திமுகவின் ஆதரவுடன் அதிமுக ஆட்சி அமைக்க திட்டமிட்டு பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் புதுவை சொகுசு விடுதியில் தங்கவைக்கப்பட்டிருந்த அண்ணா திமுக எம். எல்.ஏ.க்களுடன் அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்றிரவு ஆலோசனை நடத்தினார். இதனிடையே, அதிமுக ஆதரவு கேட்டதாகவும், அதுபற்றி மு.க. ஸ்டாலின் இன்னும் முடிவெடுக்கவில்லை என்றும் திமுக நிர்வாகி டி.கே.எஸ். இளங்கோவன் தெரிவித்தார்.

இந்தநிலையில், சென்னையில் அதிமுக எம்.பி. தம்பிதுரை செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது: இறைவன் அருளால் உரிய காலத்தில் அதிமுக ஆட்சி அமையும். அதிமுக ஆட்சிக்கு வர வேண்டும் என மக்கள் விரும்புகின்றனர். அதிகாரப்பூர்வ அறிவிப்பை எடப்பாடி பழனிசாமி வெளியிடுவார். எடப்பாடி தலைமையில் விரைவில் ஆட்சி அமையும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# திபெத்தில் நிலநடுக்கம்: ரிக்டர் அளவில் 4.1 ஆக பதிவு

லாசா, மே 8–

**திபெத்தில் இன்று அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டது.**

இந்தியாவின் அண்டை நாடுகளான திபெத் மற்றும் நேபாளத்தின் நிலப்பரப்பானது பூமிக்கு அடியில் உள்ள இந்திய மற்றும் யுரேசிய டெக்டோனிக் தகடுகள் உரசிக்கொள்ளும் பெரும் புவியியல் பிளவுக் கோட்டின் மீது அமைந்துள்ளது. இதனால், இவ்விரு நாடுகளிலும் அவ்வப்போது நிலநடுக்கம் ஏற்பட்டு வருகிறது.

இந்நிலையில் திபெத்தில் இந்திய நேரப்படி இன்று அதிகாலை 3.10 மணியளவில் திபெத்தின் நிலப்பரப்பில் இருந்து சுமார் 38 கி.மீட்டர் ஆழத்தில் 4.1 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் பதிவாகியுள்ளதாக தேசிய நில அதிர்வு ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் இதுவரை பொருட்சேதமோ, உயிர்ச்சேதமோ ஏற்பட்டதாக எந்த தகவலும் வெளியாகவில்லை. பொதுவாக ஆழமற்ற நிலநடுக்கங்கள் ஆழமான நிலநடுக்கங்களை விட அதிக ஆபத்தானவை. ஏனெனில், ஆழமற்ற நிலநடுக்கங்களில் இருந்து வரும் நில அதிர்வு அலைகள் மேற்பரப்பை அடைய குறைந்த தூரமே பயணிக்கின்றன. இதன் விளைவாக, தரை அதிர்வு வலுவாக இருப்பதோடு, அதிக கட்டமைப்பு சேதங்களும், அதிக உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன.


## எம்ஆர்எஃப் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 114, கிரீம்ஸ் சாலை, சென்னை 600 006.
CIN : L25111TN1960PLC004306; Website: www.mrftyres.com; Email: mrfshare@mrfmail.com;
Ph: 044-28292777, Fax: 28290562

(₹ கோடியில்)

31, மார்ச் 2026 அன்று உடன் முடிவடைந்த காலாண்டு மற்றும் முடிந்த ஆண்டிற்கான ஒருங்கிணைக்கப்பட்ட தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கை

| வ. எண். | விபரங்கள் | 31.03.2026 அன்று முடிந்த காலாண்டு | 31.03.2026 அன்று முடிந்த ஆண்டு | 31.03.2025 அன்று முடிந்த காலாண்டு |
|---|---|---|---|---|
| | | தணிக்கை செய்யப்பட்டது | தணிக்கை செய்யப்பட்டது | தணிக்கை செய்யப்பட்டது |
| 1 | செயல்பாடுகளிலிருந்தான மொத்த வருமானம் | 8,044.22 | 31,149.01 | 7,074.82 |
| 2 | இக்காலத்திற்கான நிகர இலாபம் (வரிக்கு முந்தையது, விதிவிலக்கான மற்றும் / அல்லது அசாதாரண இனங்கள்) | 915.77 | 3,285.38 | 659.12 |
| 3 | வரிக்கு முந்தைய இக்காலத்திற்கான நிகர இலாபம் (விதிவிலக்கான மற்றும் / அல்லது அசாதாரண இனங்களுக்கு பிற்பட்டது) | 929.73 | 3,222.14 | 659.12 |
| 4 | வரிக்கு பின்னரான இக்காலத்திற்கான நிகர இலாபம் (விதிவிலக்கான மற்றும் / அல்லது அசாதாரண இனங்களுக்கு பிற்பட்டது) | 702.25 | 2,426.10 | 510.50 |
| 5 | இக்காலத்திற்கான மொத்த முழுமையான வருமானம் (இதில் இக்காலத்திற்கான இலாபம் (வரிக்கு பிந்தையது) மற்றும் இதர முழுமையான வருமானத்தை (வரிக்கு பிந்தையது) உள்ளடக்கியது | 700.68 | 2,464.47 | 491.13 |
| 6 | முழுவதும் செலுத்தப்பட்ட சம பங்கு மூலதனம் | 4.24 | 4.24 | 4.24 |
| 7 | மற்ற சம பங்கு | - | 20,970.32 | - |
| 8 | பங்கு ஒன்றுக்கு வருமானம் (ஒவ்வொன்றும் ₹10/-) | | | |
| | 1. அடிப்படை (பங்கு ஒன்றுக்கு ₹) | 1,655.80 | 5,720.39 | 1,203.68 |
| | 2. நீர்க்கப்பட்டது (பங்கு ஒன்றுக்கு ₹) | 1,655.80 | 5,720.39 | 1,203.68 |

நிறுவனத்தின் முக்கிய தணிக்கை செய்யப்பபட்ட, ஒருங்கிணைக்கப்படாத நிதி தகவல்கள் கீழ்வருமாறு: (₹ கோடியில்)

| வ. எண். | விபரங்கள் | 31.03.2026 அன்று முடிந்த காலாண்டு | 31.03.2026அன்று முடிந்த ஆண்டு | 31.03.2025 அன்று முடிந்த காலாண்டு |
|---|---|---|---|---|
| | | தணிக்கை செய்யப்பட்டது | தணிக்கை செய்யப்பட்டது | தணிக்கை செய்யப்பட்டது |
| 1 | செயல்பாடுகளிலிருந்தான மொத்த வருமானம் | 7,908.43 | 30,652.08 | 6,943.84 |
| 2 | இக்காலத்திற்கான நிகர இலாபம் வரிக்கு முந்தையது (விதிவிலக்கான இனங்களுக்கு பிற்பட்டது) | 899.81 | 3,133.47 | 645.08 |
| 3 | வரிக்கு பிந்தைய இக்காலத்திற்கான நிகர இலாபம் (விதிவிலக்கான இனங்களுக்கு பிற்பட்டது) | 680.44 | 2,355.40 | 497.85 |

குறிப்பு: அ) 31, மார்ச் 2026 அன்று முடிந்த காலாண்டு மற்றும் முடிந்த ஆண்டிற்கான மேற்கண்ட நிதிநிலை அறிக்கையானது 07, மே 2026 தணிக்கை குழுவினரால் மறுஆய்வு செய்யப்பட்டு அன்று நடைபெற்ற இயக்குநர்கள் குழும கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டது.

ஆ) மேற்கண்டவை SEBI (Listing Obligations and disclosure Requirements) Regulations, 2015-ன் ஒழுங்குமுறை 33-ன் கீழ் பங்குச்சந்தைகளில் பதிவு செய்யப்பட்ட 31, மார்ச் 2026 அன்று முடிந்த காலாண்டு மற்றும் முடிந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை முடிவுகளின் விளக்கமான படிவத்தின் சாராம்சமாகும். 31, மார்ச் 2026 அன்று முடிந்த காலாண்டு மற்றும் முடிந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் (ஒருங்கிணைக்கப்பட்ட / ஒருங்கிணைக்கப்படாத) முழு படிவமும் மும்பை பங்குச்சந்தை (www.bseindia.com) மற்றும் தேசிய பங்குச்சந்தை (www.nseindia.com) மற்றும் (URL: www.mrftyres.com/financial-results) என்ற நிறுவனத்தின் இணையதளத்திலும் கிடைக்கப்பெறலாம். கீழே கொடுக்கப்பட்டுள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் இதை அணுகலாம்:

இடம்: சென்னை
தேதி : 07 மே, 2026

எம்ஆர்எஃப் லிமிடெட்டுக்காக
ராகுல் மாம்மென் மாப்பிள்ளை
நிர்வாக இயக்குனர்
DIN: 03325290


Edited, Printed and Published by R. Muthu Kumar at No. 1, First Main Road, United India Colony, Kodambakkam, Chennai-600 024 and printed at Print House, No.1 First Main Road, United India Colony, Kodambakkam, Chennai-600024 on behalf of M/s. Newsmen Associates Private Limited. RNI No. 24383/1973. நிர்வாகம், விளம்பரம், சர்குலேஷன் போன்: 24733910, E-mail : makkalkural@gmail.com, ஆசிரியர் குழு இ–மெயில்: makkalkural.news@gmail.com நிறுவன ஆசிரியர்: எம். சண்முகவேல். Subject to Madras Court Jurisdiction.